**செ.வெ.எண்: 557** **நாள்: 30.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு குறும்படப் போட்டிக்கான**
**பதிவுகள் 07.10.2021 வரை அனுப்பலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உலக சுற்றுலா தினத்தையொட்டி மாவட்ட நிர்வாகம் சார்பில் குறும்படப் போட்டிக்கான பதிவுகள் 07.10.2021 வரை அனுப்பலாம்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் சார்பில் உலக சுற்றுலா தினத்தையொட்டி குறும்படப் போட்டி தமிழ்/ஆங்கிலத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு இல்லை. குறும்படம் புதுக்கோட்டை மாவட்ட சுற்றுலாத் தலங்களின் சிறப்பம்சங்களை விளக்குவதாக இருக்க வேண்டும். குறும்படம் 5-நிமிடத்திற்குள் மிகாமல் உயர் தரமான வீடியோவில் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

இப்போட்டியில் கலந்துகொள்வோர் குறும்படத்தினை "e-mail" மூலமாகவோ, "Drive" மூலமாகவோ அல்லது "wetransfer" மூலமாகவோ அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரியில் (tourismpudukkottai@gmail.com) குறும்படப் போட்டிக்கான பதிவுகளை 07.10.2021 அன்று மாலை 5 மணிக்குள் அனுப்ப வேண்டும்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000, இரண்டாம் பரிசு ரூ.5,000, மூன்றாம் பரிசு ரூ.3,000 வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட சுற்றுலா அலுவலரின் 7397715682 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**